DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | CC No. 436/2025 | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : | | | |
| Sessions | : | | | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. | P.W.1 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துக்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 21.01.2026.

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மடத்துக்குளம் மதுவிலக்கு பிரிவில் சோதனை சாவடியில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் அமராவதிநகர் காவல் நிலையத்தில் 2025 ல் முதல் நிலை காவலராக பணியில் இருந்த போது கடந்த 27.07.2025 ம் தேதி அமராவதி நகர் காவல் உதவி ஆய்வாளர் சண்முகமூர்த்தி, சிறப்பு உதவி ஆய்வாளர் திருப்பதி ஆகியோருடன் தலைமை காவலர் கொங்குராஜ் ஆகியோருடன் மது விலக்கு மற்றும் சூதாட்டம் தடுக்கும் பொருட்டு ரோந்து அலுவலுக்காக புறப்பட்டு சென்றோம். மானுப்பட்டி, குளத்துப்புதுார், குருவப்ப நாயக்கனுார், தும்பலப்பட்டி கிழக்கு பகுதி ஆகிய பகுதிகளில் சென்றோம். பின்னர் அங்கு 9.30 மணிக்கு தும்பலப்பட்டி கிழக்கு தோட்டம் அருகில் கண்காணித்த போது அங்கு நிறைய பேர் இருந்தார்கள்.அதில் 2 பேர் கையில் பையோடு நின்றிருநதார்கள். அவர்களை சுற்றி வளைத்த பிடித்து விசாரித்த போது சிவசண்முகம் என்பவர் ஆலாம்பளையம் என்றும்கோபால் என்பவர் தும்பலப்பட்டி சேர்ந்தவர்என்றும கூறினார்கள். பின்னர் காவல் உதவி ஆய்வாளர் விசாரித்த போது கள் விற்பனை

செய்வதாக ஒப்புக் கொண்டார்கள். கள் விற்பனை செய்வது சட்டபடியாக குற்றம்என்பதால் அவர்களை உதவி ஆய்வாளர் கைது செய்தார். பின்னர் எதிரிகள் ஒப்படைத்த 4 லிட்டர் கள் மற்றும் மண் பானை –1 ஐ கைப்பற்றி உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். அதில் நானும், தலைமை காவலர் கொங்குராஜ் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைப்பற்றிய கள்ளை அதே இடத்தில் தோட்டத்தின் அருகிலேயே கீழே ஊற்றி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தார். அதில் நானும் தலைமை காவலர் கொங்குராஜ் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **அழித்தல் மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை நிலையம் ஆஜர்படுத்தி உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தார். அவருக்கு உதவியாக இருந்தோம். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. காவல்நிலையததிலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினிர்கள் என்றால் காலை10.00 மணிக்கு பொதுவாக ரோந்த போகும் போது பொது நாட்குறிப்பு எழுதுவது வழக்கம் என்றால் உதவி ஆய்வாளர் குறிப்பிட்டு எழுதுவார். எத்தனை வாகனத்தில் சென்றிர்கள் என்றால் 3 வாகனம். 3 வாகனமும் இரு சக்கர வாகனம் என்றால் சரிதான். 3 பேரும் சீருடையில் சென்றிர்கள் என்றால் நான் சீருடையில் தலைமை காவலர்உதவி ஆய்வாளர் கலர்உடையில் வந்திருந்தார்கள்.
2. பொதுவாக ரோந்துக்கு போகும் போது காவலர்கள் சீருடையயில் தான் இருக்க வேண்டும் என்றால் சரிதான். அப்படி இல்லாமல் தனிப்பிரிவல் இருந்தால் மட்டும்சீருடையில் இருந்துவிலக்கம் அளிக்கப்படும் என்றால் சரிதான். அன்றையதினம் ஏதாவது தனிப்பிரிவில்இருந்தார்களா என்றால் இல்லை காவல் அலுவலாக தான் வந்தோம்.
3. எந்த எந்த பகுதிக்கு ரோந்து சென்ர்கள் என்றால்–தும்பலப்பட்டியில் குறிப்பிட்டு எந்த இடம் என்றால் கிழக்கு தோடடம். நீங்கள போகும் போது எத்தனை பேர் இருந்தார்கள என்றால் 4–5 பேர்.கையில் பை

வைத்திருந்ததாக சொல்லியுள்ளநிலையல் என்ன பை என்றால் துணிப்பை. பையில் ஏதேனும் எழுதியிருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. அதன் நிறம் என்ன என்றால் வெள்ளை நிறப்பபை. பையயை யார் வைத்திருந்தார்கள் என்று உதவி ஆய்வாளர் வழக்கு கோப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். பையை யார் வைத்திருந்தார்கள் என்றால் ஞுபாகம் இல்லை. பையில் என்ன வைத்திருந்தார்கள் என்றால் 2 பாட்டில். என்ன கொள்ளவு என்றால் 1 லிட்டர் கொண்ட 2 பாட்டில்கள் வெறும் பாட்டில்களாக இருந்தது.

4. எதிரிகளுடன் பக்கத்து உள்ளவர்கள் பேசி கொண்டிருந்தார்களா என்றால் பார்க்கும் துாரத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். தும்பலப்பட்டி மெயின் ரோட்டிலிருந்து கிழக்கு தோட்டம் எவ்வளவு துாரத்தில் உள்ளது என்பது வழக்கு கோப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். கிழக்கு தோட்டம் யாருக்கு சொந்தமானது என்று விசாரித்து தெரிந்து கொண்டிர்களா என்றால் இல்லை உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். ஆஜர் எதிரிகளில் யார் கள்ளை எடுத்து ஒப்படைத்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த பானை எவ்வளவு லிட்டர் பிடிக்கும பானை என்றால 4 லிட்டர் பிடிக்கும் அளவு கொண்டது. 4 லிட்டர் பிடிக்கும் என்று அளந்து பார்த்து தெரிந்து கொண்டிர்களா என்றால் அளந்து பார்க்கவில்லை.

5. பொதுவாக ரோந்து போகும் போது என்ன என்ன கொண்டு செல்விர்கள் என்றால் பேனா பென்சில் மற்றும் பீட் புக் கொண்டு சென்றோம். வேறு எதுவும கொணடு செல்லலவில்லை என்றால் ஆமாம் எதிரியை கைது செய்து பொது ஜன மக்களை அழைத்து சாட்சியாக இருக்க சொன்னிர்களா என்றால் நான் கேட்கவில்லை உதவிஆய்வாளர் அழைத்ததார். அதற்கு அவர்கள் என்ன சொன்னார்கள் என்ற விவரம் தெரியாது என்றால்ஆமாம்.

6. பொதுவாக மகசர் தயார் செய்யும் போது மதிப்பு மிக்க இரு நபர்களை வைத்து தயார் செய்து சாட்சியாக கையொப்பம் பெற வேண்டும் என்பது தெரியுமா என்றால தெரியும். தும்பலப்பட்டியில் விஏஓ மற்றும் பள்ளி மற்றும் ஊராட்சி அலுவலகம் உள்ளது என்றால் ஆமாம். அந்த ஊர் விஏஓ மற்றும் அரசு அலுவலர்களை சாட்சியாக இருக்க உதவி ஆய்வாளர் அழைத்தாரா என்றால் அது பற்றி

தெரியாது. யாரேனும் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்திர்களா என்றால் புகைப்படம் எடுத்தார்கள். யார புகைப்படம் எடுத்ததார்கள் என்றால் உதவி ஆய்வாளர் அவரது செல்போனில் எடுத்தார்.

7. அந்த பானையை தவிரவேறு என்ன என்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. கள்ளை அழித்தது போக பானையை காவல் நிலையம் கொண்டு சென்றிர்களா என்றால் பானையை அழித்து விட்டோம். இதர பொருட்களை காவல் நிலையம் கொண்டு சென்றிர்களா என்றால் ஞாபகம் இல்லை. பானை என்ன கலர் என்றால் மண் கலர் . மண் பானை கருப்பு மற்றும் செம்மண் கலரில் உள்ளது . கைப்பற்றப்பட்ட பானை என்ன கலர் என்றால் செம்மண் கலர். பொதுஜன சாட்சிகள் முன் வராத நிலையில் புகைப்படம் யார் எடுத்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. எதிரி மற்றும் 3 காவலர்கள் தவிர்த்து வேறு யார் உங்களுடன் இருந்தார்கள் என்பது ஞாபகம் இல்லை என்றால் நாங்கள் 3 பேர் இருந்தோம் . எங்களை தவிர 4–5 பேர் இருந்தார்கள். அந்த 4–5 பேர் சாட்சியாக இருக்க முன் வராத நிலையில் புகைப்படம் எடுக்க மட்டும் முன் வந்தார்களா என்றால் உதவி ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கு இணங்க புகைப்படம் மட்டும் எடுத்தார்கள்.

8. கள் போல வாசனை கொண்ட புளித்து போன தெழுவு, புளிச்ச மோர் புளிச்ச கழுநீர், காய்கறிகள் வைத்திருக்கும் தண்ணீர் கள்ளை போன்று வாசனை வர வாய்ப்புள்ளது என்றால் இல்லை. கள் என்று எப்படி முடிவு செய்திர்கள் என்றாலும் யார் முடிவு செய்தார்கள் என்றாலும் உதவி ஆய்வாளர் முடிவு செய்தார் எதிரிகளும் சொன்னார்கள. உங்களால் கள் என்று உறுதியாக சொல்ல முடியாது என்றால் சரிதான். உதவிஆய்வாளர் செய்தார். எத்தனை வருடமாக காவல் பணியில் இருக்கிறிர்கள் என்றால் 13 வருடம். மது சம்பநத்மாக வழக்கில் காவல் ஆய்வாளர் மடடுமே அழித்தல் மகசர் தயார் செயது அழிக்க முடியும் என்பது தெரியுமா என்றால் தெரியாது. அது தெரியாமல் அழித்தல் மகசரில் கையெழுத்து செய்திர்களா என்றால் உதவிஆய்வாளர் கேட்டு கொண்டதற்க இணங்க கையொப்பம் செய்தேன். முதல் தகவல் அறிக்கை யார் தயார் செய்தார் என்றால் உதவி ஆய்வாளர். யார் சொல்லி சங்கதிகள் தயார் செய்யப்பட்டது என்றால் உதவி ஆய்வாளர். காவல் நிலையத்தில் வைத்து

ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு அங்கு வைத்து கையெழுத்து செய்ததால் தான்உங்களால் சரியாக சாட்சியம் சொல்ல இயலவில்லை என்றாலும் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.